Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, டிசம்பர் 20, 2021

## நெஸ்லே லங்கா நிறுவனம் நெஸ்லே புரொ.ஃ.பெஷனல் (Nestlé Professional) மூலமாக தனது முதலாவது சிற்றுண்டிச்சாவடியை ஆரம்பித்துள்ளது

**வீட்டிற்கு வெளியே சிறப்பான உணவுத் தருணங்களைத் தோற்றுவிக்கின்றது**

நெஸ்லே லங்கா நிறுவனம் தனது வீட்டிற்கு வெளியேயான உணவு மற்றும் பான வகைத் தீர்வுகள் வழங்குநரான நெஸ்லே புரொ.ஃ.பெஷனல் மூலமாக 'Café Goodness' என்ற பிரதான சிற்றுண்டிச்சாவடியை 2021 டிசம்பர் 11 அன்று ஆரம்பித்துள்ளது. Bloomfield Cricket and Athletic Club விளையாட்டுக் கழக வளாகத்தில் மிகவும் சௌகரியமான வசதிகளுடன் அமைந்துள்ள 'Café Goodness' சிற்றுண்டிச்சாவடியானது நெஸ்லே தயாரிப்புகளை உபயோகித்து தயாரிக்கப்படும் விரைவான மற்றும் சுவையான உணவு மற்றும் பான வகைகளை நாடுகின்ற நுகர்வோருக்கான அனைத்து தெரிவுகளையும் ஒரே இடத்திலேயே வழங்கும் வகையில் தொழிற்படுகின்றது. புகழ்பூத்த கிரிக்கெட் வீரரும், Bloomfield Cricket and Athletic Club கழகத்தின் உப தலைவருமான திரு. ரொஷான் மஹாநாம, Bloomfield Cricket and Athletic Club கழகத்தின் பொதுச் செயலாளரான திரு. சுதர்ம டி சில்வா மற்றும் புகழ்பூத்த கிரிக்கெட் வீரரான திரு. சமிந்த வாஸ் ஆகியோரால், நெஸ்லே லங்கா நிறுவனத்தின் விற்பனைத்துறை சிரேஷ்ட துணைத் தலைமை அதிகாரியான திரு. ஜகத் வெதகே மற்றும் நெஸ்லே புரொ.ஃ.பெஷனல் துணைத் தலைமை அதிகாரியான திரு. ரொஷான் பெரேரா ஆகியோர் முன்னிலையில் இந்த சிற்றுண்டிச்சாவடி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

"நெஸ்லே நிறுவனத்தின் மூலமாக வீட்டிற்கு வெளியே எமது நுகர்வு அனுபவத்தை மேம்படுத்தும் ஒரு பயணத்தில் காலடியெடுத்து வைத்துள்ளமை எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. 'Café Goodness' இனை ஆரம்பித்துள்ளதன் மூலம், எங்கள் நுகர்வோருக்கு வீட்டில் இருப்பதைப் போலவே வீட்டிற்கு வெளியேயும் சிறப்பான உணவுகளை தயாரிக்க ஒரு தனித்துவமான இடத்தை இதன் மூலமாக வழங்க எண்ணியுள்ளோம். தரமான தயாரிப்புகள், திறமையான சேவை, சிறந்த சூழல் மற்றும் உணவுப் பாதுகாப்பின் உத்தரவாதம் ஆகியவற்றால் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு அற்புதமான உணவு, பான வகைகளின் பட்டியலை நாங்கள் வழங்குகிறோம்," என்று நெஸ்லே புரொ.ஃ.பெஷனல் துணைத் தலைமை அதிகாரியான திரு. ரொஷான் பெரேரா அவர்கள் குறிப்பிட்டார்.

சமூகத்திற்கு சிறந்தவற்றை ஆற்றுகின்ற நெஸ்லே நிறுவனத்தின் முயற்சிகளின் ஒரு பகுதியாக, இந்த சேவை மையத்தின் செயல்பாடு, உணவு மற்றும் பான வகைகள் மற்றும் சேவைத் தொழிற்துறை ஆகிய இரண்டிலும் அனுபவம் வாய்ந்த, முன்னேறத் துடிக்கின்ற ஒரு தொழில் முயற்சியாளரான, சமையல் கலை வல்லுனர் பிரஷான் குமார அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நிறுவனம் அவருடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றுவதோடு, உள்கட்டமைப்பு, சமையல் குறிப்புகள் மற்றும் பயிற்சி ஆகியவற்றில் அவருக்கு தேவையான ஆதரவை வழங்கும். இதன் மூலம் வீட்டிற்கு வெளியே சிறந்த அனுபவத்தை அதன் நுகர்வோருக்கு வழங்கும். எதிர்காலத்தில் இவ்வாறான அதிக சிற்றுண்டிச்சாவடிகளை அமைப்பதன் மூலம் இந்த முயற்சியை விரிவுபடுத்தவும், ஆர்வமுள்ள தொழில்முனைவோருக்கு அதிக வாய்ப்புகளை உருவாக்கவும் நெஸ்லே திட்டமிட்டுள்ளது.

நெஸ்லே நிறுவனம் 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாக இருந்து வருகிறது. 'அனைவருக்கும், இன்றும், எதிர்வரும் தலைமுறைகளுக்கும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உணவின் ஆற்றலை வெளிக்கொண்டு வருவது' என்ற அதன் இலக்கினால் முன்னெடுத்துச் செல்லப்பட்டு, நெஸ்லே தனது பல்வேறு உணவு மற்றும் பான வகைகளின் தயாரிப்பு வரிசை மூலம் இளமை முதல் முதுமை வரை தலைமுறை தலைமுறையாக நுகர்வோருக்கு சேவையை வழங்கி வருகிறது.